1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 184/2019

2024 வது ஆண்டு ஜுன் மாதம் 10-ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கந்தையா | வட்டம் | திருநெல்வேலி |
| க.பெ /த.பெ | திரு.ராமையாநாடார் | கிராமம் | |
| வயது | 55 | மதம் | |

10.06.2024 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் 2 ம் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 25.07.1989 தேதியிட்ட தாவா சொத்திற்கான மனை வரி தோராய பட்டா அசல் வா.சா.ஆ.1 ஆகும். ராமையாநாடார் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.2. தாவா சொத்தை அளப்பதற்கு நில அளவை செய்ய செலுத்தப்பட்ட கட்டணத்திற்கான ரசீது ஒளிநகல் வா.சா.ஆ.3. வேலாயுத பெருமாள் திருநெல்வேலி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு வழங்கிய புகார் ஒளிநகல் வா.சா.ஆ.4. 2 ம் வாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.5. 04.04.2019 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை நினைவு குறிப்பு யாதாஸ்து அசல் வா.சா.ஆ.6. தாவா சொத்திற்கான மாதிரி வரைபடம் அசல் வா.சா.ஆ.7. 20.03.2023 தேதியிட்ட வீட்டு வரி ரசீது அசல் வா.சா.ஆ.8. சொத்து வரி ரசீது கணிணி பதிவிறக்கம் செய்தது வா.சா.ஆ.9. தாவா சொத்திற்கான மின் கட்டண ரசீது (எண்ணம் 2) வா.சா.ஆ.10. நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1. ஆணையர் வரைபம் நீ.ம.சா.ஆ.2. உள்வட்ட அளவர் வழங்கிய புல எண் 187 க்கான வரைபடம் நீ.ம.சா.ஆ.3. ( ஒளிநகலாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பொறுத்து அதை குறியீடு செய்ய பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணைக்கு உட்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது) பிராது படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரிவு 33 இந்திய சாட்சிய சட்டத்திற்கு உட்பட்டு குறுக்கு விசாரணை பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 20.06.2024 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)